**MINISTRY OF EDUCATION**

**கல்வி அமைச்சு**

**G.C.E. ORDINARY LEVEL - Model Paper**

**க.பொ.த சாதாரண தரம் - மாதிரி வினாத்தாள்**

**TAMIL LANGUAGE**

**தமிழ்மொழியும் இலக்கியமும்**

# QUESTION PAPER - I,II

# வினாத்தாள் - I,II




அனுசரணை :

# கல்வி அமைச்சு

## தமிழ்மொழியும் இலக்கியமும் - I, II

## க.பொ.த. (சா/த) மாதிரிப் பரீட்சை

**தரம் 11** **மூன்று மணித்தியாலங்கள்**

**கவனிக்க வேண்டியவை:**

**எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

**(i) வினாத்தாள் I இற்குரிய புள்ளிகள் 40 ஆகும்.**

**(ii) 1 தொடக்கம் 40 வரையுள்ள வினா ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

**(iii) உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில்**

### பகுதி - I

♦ **தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1) ''**மேழி** பெருக வேணும் தம்பிரானே…..'' இங்கு **மேழி** என்பது
(1) வயல் (2) கலப்பை (3) நெல் (4) மாடு

2) 'தாது ஊதி **அளி** முரலும் தண்பதியும்...!' இங்கு **அளி** என்பது
(1) மலர் (2) இதழ் (3) வண்டு (4) சங்கு

3) இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நாம் **ஆதரவு** வழங்க வேண்டும். **ஆதரவு** என்பதன் **எதிர்க்கருத்து**
(1) எதிர்ப்பு (2) உதவி (3) பொருள் (4) நிராதரவு

4) நாம் பிறருடன் **தர்க்கம்** செய்து காலத்தை விரயமாக்கக் கூடாது. **தர்க்கம்** என்பதன் **எதிர்ப்பதம்**
(1) விவாதம் (2) குதர்க்கம் (3விகற்பம் (4) முரண்பாடு

5) கட்டளைகளைப் பிறப்பித்து விட்டாலோ தானே **எசமான்** ஆகிவிடும் - **எசமான்** என்பதன் **எதிர்ப்பாற் சொல்**
(1) எசமானி (2) எசமாள் (3) எசமானள் (4) எசமாளினி

♦ **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

6) கைத்தொலைபேசியின் **வைபிரேற்றர் (Vibrator)** பல பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது. **Vibrator** என்பது
(1) எண்மாணம் (2) இறுவட்டு (3) அதிரி (4) சத்தம்

7) ஒலியைக் குறிக்கும் மரபுச் சொற்களில் **பொருத்தமற்றது**
(1) யானை - பிளிறும் (2) பன்றி - உறுமும்
(3) எருது - கனைக்கும் (4) பசு - கதறும்

8) ஆண்கள் கால்களில் அணிவது
(1) சிலம்பு (2) சலங்கை (3) மெட்டி (4) கழல்

10) பெடை- அலவன் போல பிணா

(1) காளை (2) போத்து (3) கடுவன் (4) கலை

11) 'பெருமுயற்சி செய்தல்' என்னும் பொருள் தரும் மரபுத் தொடர்

(1) கசகரணம் போடுதல் (3) கல்லில் நாருரித்தல்

(2) ஆழம் பார்த்தல் (4) ஒற்றைக் காலில் நிற்றல்

12) 'தோள் கொடுத்தல்' என்ற மரபுத் தொடரின் பொருள்

(1) உதவுதல் (2) ஏமாற்றுதல் (3) உற்சாகப்படுத்துதல் (4) பாரம் சுமத்தல்

13) தன் நலத்திற்காகப் பிறரது சொத்துக்களை அல்லது உழைப்பினை அபகரித்தல்

(1) ஏகபோகம் (2) சுரண்டல் (3) சர்வாதிகாரம் (4) தனியுரிமை

14) ஆயுள் முழுவதும் பிரமச்சாரியாக விரதம் காத்து வாழ்பவன்

(1) ஆத்திகன் (2) தபுதாரன் (3) பௌராணிகன் (4) நைட்டிகன்

15) தமக்குத் தீமை செய்வோரையும் மன்னிக்கும் பண்பைக் குறிக்கப் பொருத்தமான உவமைத் தொடர்

(1) தேடிய பூண்டு காலிலே அகப்பட்டது போல

(2) கிணறு வெட்டப் பூதம் கிளம்பியது போல

(3) அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல

(4) எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போல

16) உண்மையை வெளிப்படையாகப் பேசுபவர்கள் அதிகமான எதிர்ப்புக்களுக்கு ஆளாவார்கள் என்பதை விளக்கும் பழமொழி

(1)பொறுத்தார் பூமியாள்வார் பொங்கினார் காடாள்வார்

(2)வினை விதைத்தவன் வினை அறுப்பான்

(3)குடிப்பது கூழ், கொப்பளிப்பது பன்னீர்

(4)யதார்த்தவாதி வெகுசன விரோதி

17) பின்வருவனவற்றுள் **வேறுபட்ட** பொருளைக் கொண்ட பழமொழிச் சோடி

(1) ஆடத் தெரியாதவள் மேடை கோணல் என்றாளாம்
வேலைக் கள்ளிக்குப் பிள்ளைப் பராக்கு

(2) போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து
மனம் போல் மாளிகை

(3) காற்றுள்ள போதே தூற்றிக் கொள்
அலை மோதும் போதே தலை முழுகு

(4) அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி
அரசன் அன்று கொல்லும் தெய்வம் நின்று கொல்லும்

18) 'மிகுந்த எதிர்பார்ப்புடன் காத்திருத்தல்' என்பதை விளக்கப் பொருத்தமான அருஞ் சொற்றொடர்

(1) வழி மேல் விழி வைத்து

(2) ஊண், உறக்கமின்றி

(3) அருமை, பெருமையறியாதுழன்று

(4) உள்ளும் புறமுமொத்து

19) பின்வருவனவற்றுள் ஒத்த பொருட் சொற்களால் அமைந்த இணைமொழி

(1) சுகதுக்கம் (2) இன்னார் இனியார் (3) ஏறக்குறைய (4) கள்ளங்கபடம்

20) நளனால், தமயந்தி காட்டில் தன்னந்தனியாக விடப்பட்டாள்- தன்னந்தனி என்பது

(1) இரட்டைமொழி (2) இணைமொழி (3) அடுக்குமொழி (4) அடுக்கிடுக்குமொழி

♦ **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.**

21) புறவினாவாக அமையும் சொல்

(1) எவன் (2) எம்மனிதன் (3) யாது (4) எங்கே

22) மொழிக்கு முதலில் **வராத** எழுத்தக்களை மாத்திரம் கொண்ட தொகுதி

(1) ண், ன், ழ் (2) ம், ன், ண் (3) வ், ய், ர் (4) ஞ், ன், ழ்

23) சேயோன் மிகவும் நல்லவன் - நல்லவன் என்பது

(1) குறிப்பு வினை (2) முற்று வினை (3) பிற வினை (4) செயப்பாட்டு வினை

24) உடனிலை மெய்ம்மயக்கம் இடம்பெற்ற சொல்

(1) அன்று (2) அல்லி (3) அம்பு (4) அன்பு

25) விளி வேற்றுமை ஏற்காத சொல்

(1) நண்பன் (2) மகன் (3) மாணவன் (4) நான்

26) நாட்டில் சீரற்ற காலநிலை நிலவுகின்றது.
பாடசாலைகளுக்கு இரு நாட்கள் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.
மேற்படி இரு வாக்கியங்களையும் இதே ஒழுங்கில் இணைப்பதற்குப் பொருத்தமான இணைப்பிடைச் சொல்

(1) ஆகவே (2) எனினும் (3) ஏனெனில் (4) ஆனால்

27) மெல்லென வீசும் காற்று
உடலை ஊடுருவி வீசும்
இங்கு இரு தடவை இடம்பெற்றுள்ள வீசும் என்னும் சொல் முறையே

(1) வினையெச்சம், வினைமுற்று (2) பெயரெச்சம், வினையெச்சம்
(3) வினையெச்சம், பெயரெச்சம் (4) பெயரெச்சம், வினைமுற்று

28) அகராதி ஒழுங்கில் **அமையாத** தொகுதி

(1) காகம், கிளி, குயில், கோழி
(2) மலை, மேற்கு, மோதகம், மையல்
(3) தென்னை, தேங்காய், தையல், தோப்பு
(4) வீடு, வெண்ணிலா, வைகறை, வௌவால்

♦ **பொருத்தமற்ற உதாரணம் இடம்பெற்ற சொற்றொகுதியைத் தெரிவு செய்க.**

29) (1).பண்புத்தொகை - பைந்தமிழ், செந்தமிழ்
(2) வினைத்தொகை - மலர்விழி, வேல்விழி
(3) உவமைத்தொடர் - மலர்விழி, கயல்விழி
(4) உம்மைத்தொகை - உயிர்மெய், காலை மாலை

30) (1) இயல்புப் புணர்ச்சி - தமிழ்மொழி, நீரோடை
(2) தோன்றல் பணர்ச்சி - பூவரும்பு, மாங்கனி
(3) திரிதல் புணர்ச்சி - கடலோரம், முட்செடி
(4) கெடுதல் பணர்ச்சி - வனவிலங்கு, நீலமேகம்

- **புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

31) பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தமக்குரிய ...................... அதிகரிக்கப்பட வேண்டுமென்க் கோரிப் போராட்டம் நடத்தினர்

(1) செலவினம் (2) மானியம் (3) வேதனம் (4) சன்மானம்

32) அனைத்து அறிவுத் துறைகள் பற்றிய விடயங்களையும் ................................ திரட்டித் தருகின்றது.

(1) அகராதி (2) நிகண்டு (3) தருக்கம் (4) கலைக்களஞ்சியம்

33) இலக்கியச் சொற்பொழிவாளர் தமதுகருத்தை வலியுறுத்துவதற்குப் பல்வேறு இலக்கியங்களிலிருந்து ...................... காட்டிப் பேசினார்

(1) கருதுகோள் (2) மேற்கோள் (3) எடுகோள் (4) குறிக்கோள்

34) கைது செய்யப்பட்ட மகனைப் பற்றிய விபரங்கள் எதுவும் தெரியாத காரணத்தால் தந்தை நீதிமன்றத்தில்........................

(1) வழக்குத்தாக்கல் செய்தார் (2) கோரிக்கை விடுத்தார்

(3) விண்ணப்பம் செய்தார் (4) ஆட்கொணர்வு மனு சமர்ப்பித்தார்

- **வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.**

35) அந்த விமான விபத்து சற்றுத் தாமதமாக நடந்திருக்குமாயின் அவ்விமானத்தில் பயணஞ் செய்த அனைவரும்

(1) உயிர் இழந்தார்கள் (2) உயிர் இழந்திருப்பார்கள்

(3) உயிர் இழந்திருந்தார்கள் (4) உயிர் இழந்து விட்டனர்

36) நாம் நேர்மையாக நடந்து கொள்வோமாயின் எவ்வித துன்பங்களும் எம்மை ........................

(1) அணுகாது (2) அணுக மாட்டாது (3) அணுகா (4) அணுகமுடியாது

- **தரப்பட்ட பாடலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக.**

ஈயாத வற்சரின் வெளவி - நல்ல
இரவலர்க் கீகின்ற புரவலர் போல
ஓயாத உவர்க்கடல ள்ளி - மிக
உருண்டு திரண்டு புரண்டெழு மேகம்
செங்கதி ரோன்தனை யெள்ளி - நின்று
சிரிப்பது போல விடையிடை மின்னி
அங்கவ னோடறை கூவி - எதிர்த்
தார்ப்பது போல விடித்து முழங்கும்

37) இங்கு கவிஞர் குறிப்பிடுவது

(1) மழைக்கான அறிகுறி (2) போருக்கான ஆயத்தம் (3) மழை பொழிதல் (4) பிறருக்குக்கொடுத்தல்

38) அறை கூவுதல் என்பது

போருக்கு அழைத்தல்

இடித்து முழங்குதல்

மழை பொழிதல்

பிறருக்குக் கொடுத்தல்

39) இரவலர்க் கீகின்ற புரவலர் என்பது

(1) உவமானம் (2) உவமேயம் (3) உவமையுருபு (4) பொதுத்தன்மை

♦ **கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்கேற்ற பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.**

அ) வேகமாக வளர்ந்து வரும் விஞ்ஞானம் உலகையே ஒரு குடும்பமாக அமைத்து விட்டது.

ஆ) எனவே மொழிகளின் சொற்கோவையும் பெருகி வளர்ந்து கொண்டே செல்கின்றது.

இ) அதனால், ஒருவருடன் மற்றொருவர் நெருங்கிப் பழகும் வாய்ப்பும் அதிகரித்துள்ளது.

ஈ) அங்ஙனம் சுரந்த கருத்தக்களை உணர்த்தப் புதிய சொற்கள் பல தேவைப்படுகின்றன.

உ) அவ்வாய்ப்பு புதிய புதிய கருத்துக்களைச் சுரக்க வழி செய்யலாயிற்று.

(1) அ, உ, இ, ஆ, ஈ (2) அ, உ, இ, ஈ, ஆ

(3) அ, இ, உ, ஈ, ஆ (4) அ, உ, ஈ, இ, ஆ

## தமிழ்மொழியும் இலக்கியமும் - II

**01) சுருக்கமான விடை எழுதுக.**

(i) பின்வருந் தொடரைச் சந்தி பிரித்து எழுதுக.

‘‘மதியிழந்துதன் வாயிழந்தருந்தவன் மறைந்தான்’’

(ii) இந்த நேரம் அம்மா எங்கே போயிருப்பா? அடுக்களைக்குள்ளே தானே இருப்பா

அ) மேற்படி வாக்கியம் எந்தப் பிரதேச வழக்கு?

ஆ) ‘அடுக்களை’ என்று குறிப்பிடப்படுவது யாது?

(iii) இப்போவெல்லாம் திசைகள் எனக்குத் துலக்கமாயில்லை- இதிலுள்ள எழுவாய், பயனிகைளை எடுத்துக் காட்டுக

(iv) அகலக்கால் வைத்தல் என்ற மரபுத்தொடர் குறிக்கும் பொருள் யாது?

(v ) கல்கி ‘பொன்னியின் செல்வன்’ என்னும் நாவலை எழுதினார். இதனைச் செயப்பாட்டுவினை வாக்கியமாக மாற்றி எழுதுக.

(vi) ‘‘இறை’’ என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வரத்தக்கதாகத் தனித்தனி வாக்கியங்களில் எழுதுக.

(vii) வாழையடி வாழையாக என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வரத்தக்கதாக தனித்தனி வாக்கியங்களில் எழுதுக.

(viii) பின்வரும் வாக்கியத்தை மயக்கம் நீக்கி எழுதுக.

முன்னாள் இலங்கையின் கிரிக்கட் வீரர்களுக்கு உயர் பதவிகள் வழங்கிக் கௌரவிக்கப்படுகின்றன.

(ix) பின்வரும் சொற்களின் பொதுவழக்குச் சொற்களைத் தருக

அ) களவெட்டி ஆ) மடுவம்

(x) புணர்த்தி எழுதுக.

அ) வாள் + படை ஆ) மேற்கு + திசை

**(20 புள்ளிகள்)**

**02) பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து, ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.**

i) நாம் உண்ணும் உணவே எமது ஆரோக்கியத்துக்கு அடிப்படையாகும். ஆரோக்கியமான ஆளுமை விருத்தி, உடல் வளர்ச்சி, மற்றும் சுறுசுறுப்பான வாழ்வு என்பவற்றுக்குப் போதியளவு போசணை மிக்க உணவு அவசியமாகும். ஆனால் இன்றோ உணவுப் பழக்க வழக்கங்கள் தவறானவையாகக் காணப்படுகின்றன. இதனால் உடலின் ஆரோக்கியமும் பாதிப்படைகின்றது. எனவே எமது உணவுப் பழக்க வழக்கங்களை மாற்றியமைக்க வேண்டிய தேவை உள்ளது. இன்றைய உணவுப் பழக்க வழக்கம் அதனை மாற்றியமைக்க வேண்டிய முறைகள் என்பவற்றைக் குறிப்பிட்டு ஒரு **விளக்கக் கட்டுரை.**

ii) தொற்றா நோய்கள் இன்று சமூகத்தில் தலைவிரித்தாடுகின்றன. நீரிழிவு இதய நோய் புற்றுநோய், சிறுநீரகம் தொடர்பான நோய்கள் என்பன பரவலாகக் காணப்படுகின்றன. இவற்றுக்குப் பரம்பரை அலகுகளே பிரதான காரணி என்று இனங்காணப்பட்டாலும் மனிதர்களின் வாழ்க்கை முறையிலும், பழக்க வழக்கங்களிலும் ஏற்பட்ட மாற்றமே இந்நோய்களுக்கான அடிப்படைக் காரணமென உணரப்பட்டுள்ளது என்பதை விளக்கி நீர் நிகழ்த்தும் ஒரு **மேடைப்பேச்சு**.

iii) இன்று எமது நாட்டில் குற்றச் செயல்கள் பெருகிக் கொண்டே செல்கின்றன. கொலை கொள்ளை போதைவஸ்துப் பாவனை, பெண்கள் துஷ்பிரயோகம், சூழலைக் கேடுறுத்தல் எனக் குற்றச் செயல்கள் பல்கிப் பெருகிக் கொண்டே செல்கின்றன. இக்குற்றச் செயல்களில் ஈடுபடுவோரில் பெரும்பாலானோர் இளங் குற்றவாளிகளாக இருப்பது அவர்களின் எதிர் காலத்துக்கும் எமது நாட்டின் அபிவிருத்திக்கும் பெரும் அச்சுறுத்தலாகவே உள்ளது. ஆகவே எமது நாட்டில் மரண தண்டனையை நடைமுறைப்படுத்துவது நியாயமானதே என்ற கருத்தை ஆதரிக்கும் ஒருவருக்கும் அதனை எதிர்க்கும் ஒருவருக்கும் இடையிலான **உரையாடல்**

iv) சேந்தன் சிறுவயதிலிருந்தே சத்தியத்தைக் கடைப்பிடித்து வாழ்பவன் என்றும் உண்மை பேசுபவன். நேர்மையாக வாழ வேண்டுமென்ற இலட்சியத்தை உடையவன். அவன் படித்துப் பட்டம் பெற்று சட்டத்தரணியாகிப் புகழ் பெறுகின்றான். அவன் தொழில் நேர்மைக்குப் பல சோதனைகளும் சவால்களும் ஏற்படுகின்றன. அவன் இவற்றையெல்லாம் எதிர்கொண்டு வெற்றி பெறுகின்றான் இவற்றைச் சித்திரித்துக் காட்டும் வகையில் அமைந்த **கற்பனைச் சிறுகதை**

**(25 புள்ளிகள்)**

**03) கீழே தரப்பட்டுள்ள உரைப் பகுதியின் சுருக்கத்தை 40 - 45 சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.**

மனித வாழ்க்கையின் நோக்கம் எது என்பதை மக்கள் அறிந்து கொள்வதற்கு இலக்கியங்கள் உதவுகின்றன. பழந்தமிழர் சமூகம் பற்றிய கருத்துக்களை தாம் உருவாக்கிய இலக்கியங்களில் பதிவு செய்துள்ளனர். ஆணும் பெண்ணும் இணைந்து வாழத் தொடங்கிய போது குடும்பம் என்ற அமைப்பு உருவாகியது. குடும்ப அமைப்பிலே சில ஒழுங்குமுறைகள் திட்டமிடப்பட வேண்டியிருந்தன. ஒழுக்க நிலையிலே ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறுபாடற்ற விதிமுறைகளைப் பழந்தமிழர் பேணினர்.

பெண்ணே இல்லத்தின் தலைவியாக இருந்தாள். பெண் இல்லத்தைப் பேணுபவளாக அமைய ஆண் வெளிவாழ்க்கையைப் பேணுபவனாக அமைந்தான். ஆணும் பெண்ணுமாக இணைந்து ஓரிடத்தில் நிலையாக வாழத் தொடங்கிய போது மனை முக்கியம் பெறத் தொடங்கியது. மனை வாழ்க்கையில் வம்சாவிருத்தி முக்கிய அம்சமாகியது. குடும்பத்தில் கணவன், மனைவி ,குழந்தைகள், உறவினர்கள் நண்பர்கள் என உறவு நிலைகள் அமைந்தன. அவரவர்க்கென கடமைகளும் பொறுப்புக்களும் வகுக்கப்பட்டன. தனி மனித வாழ்வுக்குக் கற்பிக்கப்பட்ட நெறிகள் சமூகத்தில் பண்பாடாக நிலை பெற்றன. மனிதன் பண்பான நெறிமுறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் உயர்வான வாழ்வு வாழ முடிந்தது. மனிதன் கடைப்பிடித்த நெறிகள் மரபுகளாகப் பேணப்பட்டன.

**(10 புள்ளிகள்)**

**04) பின்வரும் உரைநடைப் பகுதியை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

ஆதி மொழிகளாக விளங்கிய எபிரேய மொழி ,ஆதி கிரேக்க மொழி,இலத்தீன் மொழி, வடமொழி என்பன இன்று பேச்சு வழக்கில் இல்லை. ஆனால் சீனமொழி இன்றும் சிறப்புடன் வளர்ச்சி பெற்றுத் திகழ்கின்றது. இந்தியாவில் சமஸ்கிருதம், பார்ஸி, அரபி , தமிழ் என்பன மட்டுமே செம்மொழிகளாக ஏற்கப்பட்டுள்ளன.

இன்று உலகில் பேசப்படும் மொழிகளை மூன்றாக வகைப்படுத்தலாம். எழுத்தின்றிப் பேச மட்டும் முடிந்த மொழிகள் உரோமன் எழுத்துக்களில் எழுதப்பட்டுப் பேசும் மொழிகள், தனித்துவமான எழுத்துக்கள் கொண்டு பேசப்படும் மொழிகள் என்பனவே அவையாகும்

i) ஆதி மொழிகளாக இங்கு குறிப்பிடப்படுபவை எவை?

ii) சீன மொழியின் சிறப்பு யாது?

iii) செம்மொழிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்ட மொழிகள் எவை?

iv) செம்மொழி என்பதனால் நீர் கருதுவது யாது?

v) இன்று உலகில் பேசப்படும் மொழிகளை எவ்வாறு வகைப்படுத்தலாம்,

**(10 புள்ளிகள்)**

**05)** உமது பிரதேசத்தில் கழிவுநீர் செல்லும் வடிகாலமைப்புக்கள் சீர் செய்யப்படாமல் மிக மோசமான நிலையில் காணப்படுகின்றன. இதனால் பொது மக்கள் எதிர்நோக்கும் சுகாதாரச் சீர்கேடுகளைக் குறிப்பிட்டு இவ்வடிகாலமைப்புக்களைச் சீர்செய்யுமாறு கோரி சுகாதார அமைச்சருக்கு 100 சொற்களில் ஒரு கடிதம் எழுதுக.

**அல்லது**

உமது ஊரிலுள்ள விளையாட்டுக் கழகச் செயலாளராக உம்மைக் கருதிக் கொண்டு, உமது பிரதேசத்தில் நடைபெற்ற கழக விளையாட்டுப் போட்டி பற்றிய செய்திகளைப் பிரசுரிப்பதற்கு பின்வரும் அம்சங்களைக் கருத்திக் கொண்டு 100 சொற்களில் பத்திரிகைச் செய்தி ஒன்று வரைக.

1) பிரதேசத்தின் பெயர்
2) பங்கு பற்றிய கழகங்களின் விபரங்கள்
3) காலம், நேரம்
4) பிரதம விருந்தினர்
5) நிகழ்வுகள்
6) அனுசரணை வழங்குவோர்
7) நிறைவு

**(15 புள்ளிகள்)**

MINISTRY OF EDUCATION

கல்வி அமைச்சு

G.C.E. ORDINARY LEVEL - Model Paper

க.பொ.த சாதாரண தரம் - மாதிரி வினாத்தாள்

TAMIL LANGUAGE

தமிழ்மொழியும் இலக்கியமும்

# QUESTION PAPER - III

# வினாத்தாள் - III



அனுசரணை :

# கல்வி அமைச்சு

## தமிழ்மொழியும் இலக்கியமும் - III

## க.பொ.த. (சா/த) மாதிரிப் பரீட்சை

**தரம் 11** **இரண்டு மணித்தியாலங்கள்**

**கவனிக்க வேண்டியவை:**

**i) அறிவுறுத்தல்களுக்கேற்ப ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

**ii) 1, 2, 3, 4 ஆகிய வினாக்களுக்கும் 5, 6, 7 ஆகிய வினாக்களில் ஏதாவது ஒரு வினாவுக்கும் விடை எழுதுக.**

**சுருக்கமான விடை எழுதுக.**

i) "கொங்கர்க் கமராபதி யளித்த கோவே"

அ) இங்கு குறிப்பிடப்படும் மன்னன் யார்?

ஆ) அமராபதி என்று குறிப்பிடப்படுவது எது?

ii) அட்சய இருதயம் என்ற கலையை அவன் படித்திருந்தான்

அ) "அட்சய இருதக் கலை என்றால் என்ன?

ஆ) இங்கு அவன் எனக் குறிப்பிடப்படுபவன் யார்?

iii) "கானவர்கள் விழியெறிந்து வானவரை அழைப்பர்
ககன சித்தர் வந்து காயசித்தி விளைப்பர்......."

அ) இதனைப் பாடிய புலவர் யார்?

ஆ) காயசித்தி என்பதன் பொருள் யாது?

iv) பிற உயிர்களைத் தம் உயிரில் கண்ட சமநெறிச் செல்வர் அவர்

அ) இங்கு அவர் என்று குறிப்பிடப்படுபவர் யார்?

ஆ) அவரின் இலட்சியம் யாது?

v) நான் மனிதன் மனிதனுக்கு இயல்பான எதனையும் நான் வெறுப்பதில்லை

அ) இவ்வாறு கூறியவர் யார்?

ஆ) இக்கூற்றின் மூலம் வெளிப்படுத்தப்படுவது யாது?

vi) அரவுயர்த்தோனுடன் மறுசூதாடி நீர் வென்ற அந்நாள்

அ) இங்கு அரவுயர்த்தோன் எனக் குறிப்பிடப்படுபவன் யார்?

ஆ) மேற்படி பாத்திரம் இடம்பெறும் இதிகாசம் எது ?

vii) இடது கையின் பெருவிரலை ஊன்றி
வெட்கிச் சிரித்தான்
அது ஒரு செத்த சிரிப்பு

அ) இவ் வரிகளினூடாக வெளிப்படுத்தப்படும் அவலம் யாது?

ஆ) செத்த சிரிப்பு என்பதன் மூலம் நீர் விளங்கிக் கொள்வது யாது?

viii) வென்றெறி முரசின் வேந்தரெம்
குன்றுங் கொண்டார்......

அ) இவ்வாறு கூறியவர் யார்?

ஆ) எச் சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?

ix) நீவிர் ஐவீரும் ஒருவீராய் அகலிடத்தை நெடுங்காலம்
அளித்தீர் என்றாள்

அ) ஐவீர் எனக் குறிப்பிடப்படுவோர் யாவர்?

ஆ) அகலிடம் என்று குறிப்பிடப்படும் நாடு எது?

(x) ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்
தான்புக் கழுந்தும் அளறு.

அ) இவ்வடிகள் எந்நூலில் இடம்பெற்றுள்ளன?

ஆ) அளறு என்பதன் பொருள் யாது? **(20 புள்ளிகள்)**

**02) பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

i) ஆழப் புதைந்த

தேயிலைச் செடியின்

அடியிற் புதைந்த

அப்பனின் சிதைமேல்

ஏழை மகனும்

ஏறி மிதித்து

இங்கெவர் வாழவோ

தன்னுயிர் தருவன்

அ) ஏழை மகனின் பரந்த நோக்கு எவ்வாறு புலப்படுகிறது?

ஆ) கவிஞர் எதனை வெளிப்படுத்த விழைகின்றார்?

ii) உண்பதுவு முறங்குவது மூர்க்கதைகள் பேசுவதும்
பெண்கடொழி லாமென்றே பேசிடுவ ரொருசாரார்
பெண்களுக்குத் தம்பதியே பெருந்தெய்வ மென்பர் சிலர்
பெண்களுக்கு மடிமைகட்டும் பேதமில்லை யென்பர் சிலர்
பேதைமை காணிவர்க் கொள்கை பேர்த்தறிவாய் பசுங்கிளியே

அ) பெண்களது தொழிலாகக் குறிப்பிடப்படுபவை எவை?

ஆ) பெண்களுக்குப் பெருந் தெய்வம் யார்?

(iii) சுற்றத்தார் தேவரொடுந் தொழ நின்ற
கோசலையைத் தொழுது நோக்கிக்
கொற்றத் தார்க் குரிசிலவ ராரென்று என்று
குகன் வினவக் கோக்கள் வைகு
முற்றத்தான் முதற்றேவி, மூன்றுலகு
மீன்றானை முன்னீன்றானைப்
பெற்றத்தாற் பெறுஞ் செல்வம் யான் பிறத்த
லாற்றுறந்த பெரியா ளென்றான்

அ) மூன்றுலகும் ஈன்றான், முன் ஈன்றான் எனக் குறிக்கப்படுவோர் யாவர்?

ஆ) கோசலையின் பெருமை எவ்வாறு எடுத்தக் காட்டப்படுகிறது?

iv) இத்தனைக்கும் ஒரு நோய் வந்தா படுக்கையில் கிடந்து அழுந்தவுமாட்டா ஆஸ்பத்திரி என்று அலையமாட்டா. ஆடாதோடையும் கொத்தமல்லியும் அவித்துக் குடித்து எழுந்து நடக்குறா. அக்கம் பக்கம் யாருக்கு நோய் பிடித்தாலும் கூப்பிடாத வைத்தியராய் ஓடிப்போய் மருத்துவம் செய்வா. ஊரில் எது நடந்தாலும் மூத்தம்மா தான் வேண்டும். “கைராசிக்காரி நீங்கள் தான் மாமி, என்ற தலப்புள்ளய ஏந்தணும்.

அ) இங்கு குறிப்பிடப்படும் மூத்தம்மாவின் பண்புகள் எவை?

ஆ) ‘கைராசிக்காரி’ என்பதனூடாக நீர் விளங்கிக்க கொள்வது யாது?

v) தமிழர் பண்பாடு கால அடைவில் மாற்றங்கள் அடைந்துள்ளதா எனும் வினாவிற்கு மாற்றம் அத்துணை அடைந்ததில்லை. ஆனால் வளர்ச்சி அடைந்துள்ளது என்றே கூறுதல் வேண்டும். வட ஆரியர் தமிழ்நாட்டிற்கு வந்த காலத்திலும் சமணர், ஐரோப்பியர் ஆகிய பிறநாட்டார் செல்வாக்கடைந்த காலத்திலும் தமிழர் பண்பாடு அடிப்படைக் கொள்கைகளில் அவ்வளவு மாற்றம் அடையவில்லை. பிறசமயங்களைப் போதித்த பார்ப்பனரும் சமணரும் புத்தரும் ஐரோப்பியக் கிறிஸ்தவரும் மகமதியரும் தமிழர் பண்பாட்டைத் தழுவ முயன்றனர்

அ) தமிழர் பண்பாட்டைத் தழுவ முயன்ற பிறசமயத்தவர்களைக் குறிப்பிடுக?

ஆ) தமிழர் பண்பாடு வளர்ச்சி அடைந்துள்ளது என்பதற்குக் காட்டப்பட்ட ஆதாரங்கள் எவை? **(20 புள்ளிகள்)**

**03) நாட்டார் பாடல்களில்**

அ) ஏர்ப்பாடலில் உழவனின் பொதுநலம்

ஆ) மீனவர் பாடலில் கடல் மீதான நம்பிக்கை என்பன வெளிப்படுத்தப்படுமாற்றினை விளக்குக.

**அல்லது**

**சங்கப்பாடல்களில்**

அ) குறுந்தொகையில் தலைவன் வராதவிடத்தும் தலைவி அடைந்த இன்பம்.

ஆ) புறநானூற்றில் இளமையின் இனிமை, முதுமையின் கொடுமை என்பன புலப்படுத்தப்படுமாற்றை விளக்குக.

**(15 புள்ளிகள்)**

**04) ‘நாவலர் எழுந்தார்’ என்ற கட்டுரையில்**

அ) நாவலரின் நேர்மை

ஆ) பிறிற்றோவின் நேர்மையீனம் என்பவற்றை விளக்குக.

**அல்லது**

**‘ எது நல்ல சினிமா’ என்ற கட்டுரையில்**

அ) சினிமா மொழி

ஆ) சினிமாவின் சீரழிவிற்கான காரணங்கள் என்பவற்றை விளக்குக.

**(15 புள்ளிகள்)**

♦ **5, 6, 7 ஆகிய வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து விடை எழுதுக.**

**05) ‘நீதிப் பாடல்களில்’**

அ) மூதுரை கூறும் அடக்கம்

ஆ) நாலடியார் கூறும் நட்பு என்பவற்றை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

**06) ‘குழந்தையென எனது மனம் குதூகலிக்கும்’ என்ற கவிதையில்**

அ) இயற்கைக் காட்சிகள்

ஆ) வாழ்வியல் அம்சங்கள் என்பன எடுத்துக்காட்டப்படுமாற்றை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

**07) தனிப்பாடல்களில்**

அ) சீதக்காதியின் கொடைச் சிறப்பு

ஆ) காளமேகத்தின் கவிச் சிறப்பு என்பவற்றை விளக்குக.

**(10 புள்ளிகள்)**